

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.9.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சைதாப்பேட்டை வாழைத் தோப்பு திட்டப்பகுதியில் 77.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 504 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து பயனாளிகளுக்கு குடியிருப்பிற்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.9.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சைதாப்பேட்டை வாழைத் தோப்பு திட்டப்பகுதியில் 77.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 504 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார். அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், ரூ.77.76 கோடி மதிப்பில் 504 புதிய குடியிருப்புகள்!

# ‘விளிம்புநிலை மக்களைத் தலைகுனிய விடமாட்டேன்’ என்கிற முதலமைச்சரின் உள்ளஉறுதிதான் இந்தக் குடியிருப்புகள்!

### சென்னை சைதாப்பேட்டையில் நடைபெற்ற விழாவில் — துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை,செப்.24-

**சென்னை சைதாப்பேட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970-இல் கட்டப்பட்ட சைதாப்பேட்டை வாழைத் தோப்பு குடிசைமாற்று வாரியக் குடியிருப்புக்கு மாற்றாக, தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.77.76 கோடி மதிப்பில் 504 புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு, பயனாளிகளிடம் வழங்கும் வகையில், அதற்கான ஒதுக்கீட்டு ஆணைகளை சைதாப்பேட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.**

**அப்போது அவர், ``விளிம்புநிலை மக்களைத் தலைகுனிய விடமாட்டேன் என்கிற முதலமைச்சரின் உள்ளஉறுதிதான் இந்தக் குடியிருப்புகள். உங்களுக்கு நம் திராவிட மாடல் அரசு அனைத்து வகையிலும் துணை நிற்கும். நீங்கள் அத்தனை பேரும் நம் அரசுக்கும், முதலமைச்சருக்கும் துணையாக நிற்க வேண்டும்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

சைதாப்பேட்டை வாழைத்தோப்புப் பகுதியில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பாக புதிய குடியிருப்புகளை பயனாளிகளுக்கு வழங்குகின்ற சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மிகப்பெரிய மகிழ்ச்சி அடைகிறேன்.

#### நெருங்கிய தொடர்பு

தமிழ்நாட்டின் எந்தப் பகுதிக்கு சென்றாலும், எந்த மாவட்டத்துக்குச் சென்றாலும் இந்த சைதாப்பேட்டை பகுதி மக்களைச் சந்தித்தால் மட்டும் ஒரு தனி மகிழ்ச்சியும், தனி உற்சாகமும் பிறக்கும். ஏனென்றால், நம் இயக்கத்துக்கும், இயக்கத்தின் வரலாற்றுக்கும் இந்த சைதாப்பேட்டை பகுதிக்கும் மிக மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிதான் இந்த சைதாப்பேட்டை தொகுதி.

அத்தகைய புகழ்பெற்ற இந்த சைதாப்பேட்டை தொகுதிக்கு வருகை தந்து, இந்தப் புதிய வீடுகளுக்கான ஆணைகளை கொடுக்கின்ற வாய்ப்பை எனக்கு அளித்த மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அன்பரசன் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும் முதலில் என் பாராட்டுகளையும், நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

#### கான்கிரீட் வீடுகள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் தமிழ்நாட்டிலேயே குடிசைப் பகுதிகள் இருக்கக்கூடாது என்ற ஒரு தொலைநோக்குப் பார்வையோடு திட்டமிட்டு செயல்பட்டார். இங்கே குறிப்பிட்டதுபோல, 1970-களில் இந்தியாவிலேயே முதன்முறையாக குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். வாரியத்தை உருவாக்குவதுடன் மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய குடிசை வீடுகளை எல்லாம் அகற்றிவிட்டு, அங்கே கான்கிரீட் வீடுகள் அமைய வேண்டும் என்ற திட்டத்தைத் தீட்டியவரும் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.



குறிப்பாக, இந்த சைதாப்பேட்டை தொகுதியில் 1970-ஆம் ஆண்டில், இதே இடத்தில் 448 குடியிருப்புகளைக் கட்டி தந்தார் கலைஞர். அந்தக் குடியிருப்புகள் பழமையான காரணத்தினால், இன்றைக்கு நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் சுமார் 78 கோடி ரூபாய் செலவில் 504 புதிய குடியிருப்புகளை உங்களுக்குக் கட்டி கொடுத்திருக்கிறார். அன்றைக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் உங்களின் அப்பா - அம்மா, தாத்தா - பாட்டி அவர்களிடம் இந்த வீடுகளை ஒப்படைத்திருப்பார். இன்றைக்கு அவரின் மகன் நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு இந்த வீடுகளை மீண்டும் உங்களிடம் கொடுத்திருக்கிறார்.

#### 6,000 கோடி ரூபாய்

புதிய வீடு வேண்டும் என்பது உங்களின் நீண்ட நாள் கோரிக்கை மட்டுமல்ல, அது உங்களின் உரிமை, உங்களின் பல நாள் கனவு. அந்தக் கனவை இன்றைக்கு நம் திராவிட மாடல் அரசு உண்மையாக்கி இருக்கிறது. இப்படி அன்றைக்கும், இன்றைக்கும், என்றைக்கும் நம் கழக அரசு மக்களுக்காக தொடர்ந்து உழைத்துக்கொண்டே இருக்கும். ஆட்சிக்கு வந்த இந்த நான்கரை ஆண்டுகளில் கிட்டத்தட்ட 6,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 52,000 வீடுகளை இந்த வாரியம் மூலமாக நம் முதலமைச்சர் அவர்கள் கட்டி கொடுத்திருக்கிறார். 18 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வீட்டுமனை பட்டாக்களையும் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்.

இந்த வீடுகள் எல்லாம் கட்டி முடிக்கப்படும் வரை நீங்கள் வெளியில் தங்கி இருந்தீர்கள். இங்கு அண்ணன் அன்பரசன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார். முன்பெல்லாம் இந்த வீடுகள் கட்டி முடிக்கும் வரை, நீங்கள் வெளியில் சென்று தங்கி இருந்தீர்கள் என்றால், அதற்கான உதவி தொகையாக 8,000 ரூபாயை அரசு கொடுத்து வந்தது. நம் அமைச்சர் அவர்களும், உங்களின் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் முதலமைச்சரிடம் சென்று இந்த 8,000 ரூபாய் என்பது மக்களுக்குப் போதாது என்று குறிப்பிட்டு வலியுறுத்தியதால், நம் முதலமைச்சர் அவர்கள் அந்த 8,000 ரூபாயை 24,000 ரூபாயாக உயர்த்தி கொடுத்தார்கள்.

#### 410 சதுர அடிகள்

இன்றைக்கு கொடுக்கப்படுகின்ற இந்த ஒவ்வொரு வீடும் முன்பு 300 சதுர அடியாக இருந்தது. ஆனால், இன்றைக்கு 410 சதுர அடியாக உயர்த்தப்பட்டு கட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இங்கு நிறைய மகளிர் வந்திருக்கிறீர்கள். அதனால் ஒரு முக்கியமான விஷயத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சமத்துவபுரம் திட்டத்தை அறிமுகப்படுத்திய போது, அங்கு இருக்கக்கூடிய வீடுகளில் தங்கி இருக்கக்கூடிய மகளிரின் பெயரிலேயே பதிவு செய்து கொடுத்தார்கள்.

இன்றைக்கு கலைஞர் வழியில் நம் முதலமைச்சர் அவர்களும் இங்கே ஒதுக்கப்படுகிற அத்தனை வீடுகளையும், மகளிரின் பெயரிலேயே பதிவு செய்து கொடுத்திருக்கிறார்.

அதுமட்டுமில்லாமல் ஆட்சிக்கு வந்தவுடன் நம் முதலமைச்சர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணம் திட்டம். இந்த விடியல் பயணம் திட்டத்தின் மூலமாக, இந்த நான்கரை வருடங்களில் மட்டும் 780 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள். அடுத்து இன்னொரு முக்கியமான திட்டம் அதுதான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 20 லட்சம் குழந்தைகள் தரமான காலை உணவை ருசித்துக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் பள்ளிப் படிப்பை மட்டும் படித்தால் பத்தாது. உயர் கல்வி படிக்க வேண்டும் என்று, நம் தலைவர் அவர்கள் அரசு பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சென்று உயர்கல்வி படித்தாலும், அவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் மாணவிகளுக்கு புதுமைப்பெண், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டங்கள் மூலம் வழங்கிக்கொண்டு இருக்கிறார். இதன்மூலம் எட்டு லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்றிருக்கிறார்கள்.

#### மகளிர் உரிமைத் தொகை திட்டம்

அடுத்து மிக மிக முக்கியமான திட்டம். ஒட்டுமொத்த இந்தியாவையே நம் முதலமைச்சர் அவர்கள் திரும்பி பார்க்க வைத்த திட்டம். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். இந்த திட்டம் ஆரம்பித்து 24 மாதங்கள் நிறைவடைந்துள்ளன. மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என கிட்டத்தட்ட 24,000 ரூபாயை, ஒரு கோடியே 20 லட்சம் மகளிருக்கு நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

சமீபத்தில், நடந்த உங்களுடன் ஸ்டாலின் முகாம்களிலும், மகளிர் உரிமைத் திட்டத்தில் விடுபட்ட நிறைய மகளிர் அதற்காக விண்ணப்பித்திருக்கிறார்கள். விதிமுறைகளை சற்று தளர்த்தி, தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் விரைவில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வந்து சேரும் என்று நான் இங்கே உறுதியளிக்கிறேன்.

இன்றைக்கு வீடு வாங்கி விட்டோம், சொந்த வீடு கிடைத்துவிட்டது என்று நீங்களெல்லாம் மகிழ்ச்சியோடு இருப்பீர்கள். அதோடு நின்று விடக்கூடாது. அரசு இந்த வீடுகளை உங்களுக்கு ஒதுக்கி கொடுத்தாலும், உங்களின் பங்களிப்பாக சிலருக்கு ஒரு லட்சம் ரூபாயில் இருந்து நான்கு லட்சம் வரை இருக்கிறது. அதற்காக, உங்களின் நகைகளை நீங்கள் அடமானம் வைத்திருக்கலாம், உங்களின் சேமிப்பைப் பயன்படுத்தி இருக்கலாம், உங்களுக்கு தெரிந்தவர்களிடம் இருந்து கடனாக கூட வாங்கி இருக்கலாம். ஆகவே இந்த குடியிருப்புகளை நீங்கள் இனி மேல் பொறுப்போடு பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

#### தலைகுனிய விடமாட்டேன்

குறிப்பாக, தனியார் குடியிருப்புகள் போல, உங்களுக்குள்ளேயே ஒரு குடியிருப்போர் நலச் சங்கத்தை உருவாக்கி, முறையாகப் பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’ என்று நம் தமிழ்நாட்டு மக்களை எல்லாம் ஓரணியில் முதலமைச்சர் அவர்கள் திரட்டுகின்றார். அதுதான் சுயமரியாதைக்கான ஒரு முழக்கம். அதே போல ஏழை எளிய மக்களுக்கு தரமான அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டுக் கொடுத்து உங்களின் வாழ்விட உரிமையைப் பாதுகாப்பதும் சுயமரியாதைதான். அந்த நடவடிக்கையைத்தான் நம் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார். விளிம்புநிலை மக்களைத் தலைகுனிய விடமாட்டேன் என்கிற முதலமைச்சரின் உறுதிதான் இந்தக் குடியிருப்புகள். உங்களுக்கு நம் திராவிட மாடல் அரசு அனைத்து வகையிலும் துணை நிற்கும். நீங்கள் அத்தனை பேரும் நம் அரசுக்கும், முதலமைச்சருக்கும் துணையாக நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்காக உழைக்க நம் முதலமைச்சர் தயாராக உள்ளார். இந்த அரசு தயாராக உள்ளது. ஆகவே நீங்களும் நம் அரசுக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இன்றைக்கு புதிய வீடுகளில் குடியேறக்கூடிய உங்கள் அத்தனைபேருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, உங்களின் வாழ்க்கை சிறப்பாக அமையட்டும் என்று சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அரவிந்த் ரமேஷ், காரப்பாக்கம் கணபதி, பிரபாகர் ராஜா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் காக்கர்லா உஷா ஐ.ஏ.எஸ்., வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா சிங் ஐ.ஏ.எஸ்., இணை மேலாண்மை இயக்குநர் பிரியா ரவிச்சந்திரன் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சியின் மண்டல குழு தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், நொளம்பூர் ராஜன், மாமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன், குணசேகரன், பாலவாக்கம் மனோகரன், பாஸ்கரன், மணிமாறன், அருணாச்சலம், அயப்பாக்கம் வீரமணி, சைதை அன்பரசன், விநாயகம் மூர்த்தி, கிருஷ்ணகுமார், சங்கர் கணேஷ், பாண்டியன், ரவி, தியாகராஜன், தமிழ்வேல், பிரபு உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



கோவை தெற்கு மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி செட்டிபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட 2,4,5,9,12,14,15 ஆகிய வார்டுகளுக்கு செட்டிபாளையம் காயத்ரி மஹாலில் செட்டிபாளையம் பேரூராட்சி தலைவர் மு.ரங்கசாமி முன்னிலையில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமை கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்து நேரில் பார்வையிட்டு பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கி, கலந்து கொண்ட பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார். இதில் செட்டிபாளையம் பேரூர் கழக செயலாளர் கனகராஜ், பவித்ரா, அவைத்தலைவர் பன்னீர் செல்வம், கவுன்சிலர்கள், வார்டு செயலாளர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



கிண்டி அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற முன்னாள் மாணவர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கல்லூரி முகப்பு குவிமாடத்தில் புனரமைக்கப்பட்ட கடிகாரம், புதியதாக உருவாக்கப்பட்டுள்ள புகழ் மண்டபம் (Hall of Fame), சிறிய ஒளிப்பட அரங்கம் (Mini Auditorium) மற்றும் விருந்தினர் தங்கும் அறைகள் ஆகியவற்றை 21.09.25 அன்று திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் ஜெ.பிரகாஷ், பொறியியற் கல்லூரி முதல்வர் முனைவர் பி.ஹரிஹரன், முன்னாள் மாணவர்கள் சங்கத் தலைவர் எம்.வி.ரூப்சந்தர், செயலாளர் ஜெ.கனகராஜ், பொருளாளர் எம்.சரவணன் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.